

கடலூர் மேற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில், விருத்தாசலம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் அலுவலகத்தை விருத்தாசலம் புறவழி சாலையில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் ஆகியோர் திறந்து வைத்தனர். இந்நிகழ்வில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக நிர்வாகிகள் மற்றும் சார்பு அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. மற்றும் செஞ்சி ஒன்றிய, பேரூர் கழகம் சார்பில் மறைந்த முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறனின் 22ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு செஞ்சி பேருந்து நிலையம் எதிரில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு விழுப்புரம் வடக்கு மாவட்டச் செயலாளர், முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் செஞ்சிஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன் ,நகர செயலாளர் கார்த்திக் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.

## நவம்பர் 27 இளைஞர் எழுச்சி நாளை முன்னிட்டு

# திருச்சி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட, பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் கழக கொடியேற்றி இனிப்புகள் வழங்கும் விழா!



## மாவட்ட செயலாளர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

| வ.எண் | பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழகங்கள் | தலைமை | கொடியேற்றுபவர்கள் | கொடியேற்றும் இடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | மலைக்கோட்டை பகுதி | R.மோகன் | வண்ணை அரங்கநாதன் K.கயல்விழி | 10 |
| 2. | மார்க்கெட் பகுதி | RG.பாபு | எம்.மாரியப்பன் N.A.உதயகுமார் | 10 |
| 3. | பாலக்கரை பகுதி | T.P.S.S.ராஜ் முஹம்மது | நவல்பட்டு கே.சண்முகம் ந.செந்தமிழ் செல்வன் | 10 |
| 4. | கலைஞர் நகர் பகுதி | G.மணிவேல் | R.மணிமேகலை P.ஜெயநிர்மலா | 10 |
| 5. | அரியமங்கலம் பகுதி | A.M.G.விஜயகுமார் | V.சரோஜினி D,திவ்யா | 10 |
| 6. | பொன்மலை பகுதி | E.M.தர்மராஜ் | உ.ராஜேஸ்வரன் கே.ஏ.வி.தினகரன் | 10 |
| 7. | காட்டூர் பகுதி | O.நீலமேகம் | V.தனசேகரன் S.வெங்கடேஷ்வரன் | 10 |
| 8. | திருவெறும்பூர் பகுதி | S.சிவக்குமார் | லீலாவேலு வே.பொற்கொடி | 10 |
| 9. | மருங்காபுரி வடக்கு ஒன்றியம் | C.செல்வராஜ் | பி.எம்.சபியுல்லா டால்பின் சாலமன் | 17 |
| 10. | மணப்பாறை ஒன்றியம் | C.ராமசாமி | இரா.குணசேகரன் கோ.ரமேஷ் | 14 |
| 11. | திருவெறும்பூர் வடக்கு ஒன்றியம் | K.S.M.கருணாநிதி | என்.செந்தில் ப.கிருஷ்ணகோபால் | 11 |
| 12. | மருங்காபுரி தெற்கு ஒன்றியம் | C.சின்னடைக்கன் | இரா.மூக்கன் கா. முத்து வெங்கடேஷ் | 15 |
| 13. | வையம்பட்டி வடக்கு ஒன்றியம் | R.சீரங்கன் | ஆறு.சந்திரமோகன் மு.ஜியாவுதீன் | 10 |
| 14. | மருங்காபுரி மத்திய ஒன்றியம் | M.பழனியாண்டி | KKK.கார்த்தி அ.வெங்கடேஷ் குமார் | 17 |
| 15. | திருவெறும்பூர் தெற்கு ஒன்றியம் | C.கங்காதரன் | KC.பழனிச்சாமி பி.அருள் சுந்தர்ராஜன் | 10 |
| 16. | வையம்பட்டி தெற்கு ஒன்றியம் | V.A.ராஜேந்திரன் | B.A.நூர்கான் சூ.அடைக்கல ராஜா | 10 |
| 17. | துவாக்குடி நகரம் | E.காயாம்பு | பொன்.செல்லையா ஆ.ஜெகதீசன் | 21 |
| 18. | மணப்பாறை நகரம் | மு.ம.செல்வம் | எஸ்.பன்னீர்செல்வன் M.C.சிவகுமார் | 27 |
| 19. | பொன்னம்பட்டி பேரூர் | K.A.நாகராஜ் | என்.கோவிந்தராஜ் ஆர்.பி.சுந்தர்ராஜன் | 15 |
| 20. | கூத்தைப்பார் பேரூர் | கே.தங்கவேல் | மா.தமிழ்செல்வன் எம்.ஏ.ஜெய்னுத்தீன் | 18 |

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர், வட்ட, வார்டு, கிளை கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள் மற்றும் கழக தொண்டர்கள் என அனைவரும் திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி,**
**செயலாளர், திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.**

# கலைஞர் தொலைக்காட்சி நிருபர் மீது தாக்குதல்!

## சீமானுக்கு புதுச்சேரி தி.மு.க. கண்டனம்!

புதுச்சேரி, நவ. 25-

எஸ்.ஐ.ஆர். குறித்து கேள்வி எழுப்பிய கலைஞர் தொலைக்காட்சி நிருபர் மீது தாக்குதல் நடத்திய சீமானுக்கு புதுச்சேரி மாநில திமுக தமது கண்டனத்தை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக திமுக மாநில அமைப்பாளர் இரா. சிவா எம்.எல்.ஏ. வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் கூறியிருப்பதாவது: -

அரசியல் கட்சியின் தலைவர்களுக்கு பெருந்தன்மையும், முதிர்ச்சியும் பொறுமையும் தேவை. பொது விவாதங்களில் பொதுமக்களும், செய்தியாளர்களும் அவர்களிடம் வைக்கும் கேள்விகளுக்கு நிதானத்துடனும், மரியாதையுடனும் பதிலளிக்க வேண்டும். பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் போன்றவர்கள் பத்திரிகையாளர்களின் எவ்விதக் கேள்விகளுக்கும் கோபமின்றி பதிலளித்து அவர்களின் உறவைப் பேணி வந்தனர். அதே வழியில் தான் கழகத் தலைவர் தளபதி அவர்களும் பத்திரிக்கையாளர்களை எதிர்கொள்கிறார்.

ஆனால் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் போன்ற அரசியல்வாதிகள் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு முறையாக பதில் கூறாமல் அவர்கள் எந்த பத்திரிகை, எந்த ஊடகம் என்று விசாரித்து மிரட்டுவதும், பொது வெளியில் அவர்களை ஒருமையில் பேசுவதும் தனது தற்குறி பரிவாரங்களுடன் அவர்களை அவமரியாதை செய்வதையும் தொடர்கதையாக வைத்துள்ளார். இதுபோன்ற அநாகரிகச் செயலில் சீமான் தொடர்ந்து ஈடுபடுவதை தமிழ் மக்கள் நன்கு அறிவர்.

பத்திரிகையாளர்கள் கேட்கும் கேள்விகளுக்கு முறையாக பதிலளிக்காமல் அவர்களை அவமரியாதை செய்வது இவர்களின் வக்கிர புத்தியை காட்டுகிறது. ஒரு சாதாரண மனிதனுக்கு இருக்கும் கண்ணியம் கூட இவருக்கு இருப்பதில்லை.

இன்று புதுச்சேரி வில்லியனூர் தனியார் திருமண நிலையத்தில் நடந்த ஒரு செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட சீமான், எஸ்.ஐ.ஆர். பற்றி கேள்வி எழுப்பிய கலைஞர் தொலைக்காட்சி நிருபர் ராஜீ என்பவரை அவர் எந்த தொலைக்காட்சி என்று கேட்டு உன்னையெல்லாம் எவன் கேள்வி கேட்கச் சொன்னது. உனக்கெல்லாம் என்ன யோக்கியதை இருக்கிறது என்று ஒருமையில் தரக்குறைவான வார்த்தையில் திட்டி அவரை கேள்வி கேட்கக் கூடாது என்று மிரட்டி இருக்கிறார். அத்துடன் தன்னுடன் வந்தவர்களை ஏவி தொலைக்காட்சி நிருபரை நெட்டித் தள்ளி தாக்கச் செய்துள்ளார். இது மிக கேவலமான அத்துமீறல் என்பதுடன் ஜனநாயகத்தை கேள்விக் கூத்தாக்கும் செயலாகும்.

செய்தியாளர்களுக்கு துணையாக யாரும் இல்லை என்ற எண்ணத்தில் தனது ஆட்களை வைத்து அவர்களை தாக்குவது காட்டுமிராண்டித் தனமாகும். ஆனால் எங்கள் கழகம் அப்படி எங்களை வளர்க்கவில்லை. சமூக நீதி வழியில் நாங்கள் வீறுநடை போடுகிறோம்.

கலைஞர் தொலைக்காட்சியுடன் அரசியல் ரீதியாக சீமான் மோதட்டும். நாங்கள் சந்திக்க தயாராக இருக்கிறோம். அதைவிடுத்து அப்பாவி செய்தியாளரிடம் மோதுவது கீழ்த்தரமான செயலாகும். இதுகுறித்து புதுச்சேரி பத்திரிகையாளர் சங்கத்தினர் வில்லியனூர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளனர். காவல் துறை உரிய நடவடிக்கையை பாகுபாடின்றி எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



முன்னாள் ஒன்றிய அமைச்சர் முரசொலி மாறன் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு வாணியம்பாடியில் உள்ள மாவட்டக் கழக அலுவகத்தில் வைக்கப்பட்டிருந்த அவரின் திருவுருவப் படத்திற்கு திருப்பத்தூர் மாவட்டச் செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க.தேவராஜி மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் மு.அசோகன், ஆலங்காயம் மத்திய ஒன்றிய பொறுப்பாளர் வி.ஜி.அன்பு, மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி அமைப்பாளர் எஸ்.ராஜா, மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எம்.சிங்காரவேலன், மாவட்ட பிரதிநிதி சி.சிவகுமார், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் வி.எஸ்.கார்த்திக் மற்றும் கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

# திருக்குவளையில் முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் 22 ஆம் ஆண்டு நினைவு நாள் !

## முரசொலி மாறன் சிலைக்கு என். கௌதமன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை!

நாகை, நவ.25-

நாகை மாவட்டம் திருக்குவளையில் முன்னாள் மத்திய அமைச்சர் முரசொலி மாறன் 22 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது சிலைக்கு மாவட்டக் கழகச் செயலாளர், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

நாகை மாவட்டம் திருக்குவளையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் இல்லத்தில் பிறந்த முரசொலி மாறன் அவர்களின் 22 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு திருக்குவளையில் கலைஞர் இல்லத்தில் உள்ள முரசொலி மாறன் உருவ சிலைக்கு நாகை மாவட்டக் கழக செயலாளரும் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவர் என்.கௌதமன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். முன்னதாக கலைஞர் சிலை, கலைஞர் தந்தை முத்துவேலர், தாயார் அஞ்சுகம் ஆகியோர் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் உ.மதிவாணன், அஞ்சுகம் அறக்கட்டளை அறங்காவலரும், தலைமைச் செயற்குழு உறுப்பினருமான இல.மேகநாதன்,

தலைமைச் செயற்குழு உறுப்பினர் க. இராஜேந்திரன், ஒன்றிய கழக செயலாளர்கள் ஆ.தாமஸ்ஆல்வா எடிசன், சோபா.மலர் வண்ணன், மகா.குமார், பொதுக்குழு உறுப்பினர் சிவக்குமார், அன்னை அஞ்சுகம் அறக்கட்டளை அறங்காவர் சண்முகசுந்தரம்,

மாவட்ட சுற்றுச் சூழல் அணி அமைப்பாளர் க.சத்தியமூர்த்தி, மாவட்ட சார்பு அணிகளின் துணை அமைப்பாளர்கள் பி. தியாக ராஜன், வி.எம்.கே.பாலாஜி, எம்.செந்தில்.வீரராகவன், எஸ். செல்வா, ஒன்றிய நிர்வாகிகள் பார்த்திபன், சுரேஷ், கலைஞர் இல்ல காப்பாளர் தியாகராஜன், ஒன்றிய குழு முன்னாள் உறுப்பினர் சுதா. உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மனசாட்சி முரசொலி மாறன் அவர்களின் 22வது நினைவு நாளையொட்டி வேலூர் வடக்கு மாவட்ட திமுக சார்பில் , கே.வி.குப்பம் ஒன்றிய திமுக அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப் படத்திற்கு வேலூர் வடக்கு மாவட்ட பொறுப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் மலர் மாலை அணிவித்து மலர்த்தூவி மரியாதை செலுத்தினார். உடன் ஒன்றியக் கழக செயலாளர்கள் லோ.ரவிசந்திரன், சீதாராமன், முருகேசன், ஒன்றிய கழக நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**சமயநல்லூர் செல்வராஜ்**
**நவம்பர் 25 (2012)**



சமயநல்லூர் தொகுதியிலிருந்து இருமுறை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

தலைவர் கலைஞர் அவர்களின் அமைச்சரவையில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சராக 1996 முதல் 2001ஆம் ஆண்டு வரை பொறுப்பு வகித்தவர்.

“இளமைக் காலத்திலேயே, மாணவப் பருவத்திலே ஆசிரியராகப் பணியாற்றிய காலத்திலேயே சுயமரியாதை வீரராகத் திகழ்ந்தவர். அவர் முடிவெய்துகிற வரையில் முனை முறியாமல்; திராவிட இயக்கச் சிந்தனையாளராக சுயமரியாதைச் சுடராகத் திகழ்ந்தவர்” என தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**